**Vol:4 Issue 2 Nov.2020** **P.g No: 42 - 51**




ISSN : 2456-821X

***கட்டுரையாளர் :***

*முனைவர் **சி. ஆரோக்கிய தனராஜ்***
*ஒருங்கிணைப்பாளர் பணிமுறை - II*
*உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,*
*தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி - 620 002.*

***தலைப்பு : உயர்கல்வியில் மனித உரிமைக் கல்வியைத் தமிழ்வழி கற்பிக்கும் முறைகள்***

shctpt.edu

***முன்னுரை***

*கல்வி என்பது வெறும் தகவல்களை மூளையில் திணிக்கம் வேலை அல்ல. அது சமூக மதிப்பீடுகளையம் பிற சமூகக் குழுக்களுடன் உறவாடும் பண்பையும் வளர்க்கும் செயல்பாடுகளாக இருக்க வேண்டும். ஆனால், இக்காலக்கட்டத்தில் "ஈ கல்வி" என்ற பெயரில் மாணவர்களைச் சமூகத்திலிருந்து பிரித்து தனிமைப்படுத்தும் முயற்சிகளாகிவிடுகின்றன. ஒரு கல்வி நிலையம் எப்படி இருக்க வேண்டும் என்றால் பல்லாயிரம் மாணவர்களுடன் பயில்வதும் வகுப்பறையில் சக மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் உரையாடிக்கல்வி பெறுவதுமான சூழல் மாணவர்களுக்கு இக்காலக்கட்டத்தில் மறுக்கப்படுகின்றன. ஒரு மாணவன் தற்காலத்தில் எந்திரமனிதனாகவே (Robat)*

உருவாக்கப்படுகிறானே ஒழிய சமூகச் சிந்தனை உள்ளவனாக இருக்கமுடியுமா? என்பது ஐயம். இன்றைய உலக மயமாக்கச்சூழலில் மனித உரிமைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டும் அவற்றை மனித உரிமைகள் அறிந்த சான்றோர்களால் தான் நடத்தபடவேண்டும் எப்படிப்பட்ட முறையில் நடத்தினால் அவற்றைச் சிறப்பாகக்கொண்டு செல்லமுடியும் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**மனித உரிமைக்கல்வியின் முக்கியத்துவம்:**

அறிவுயுகம் எனப்படும் இன்றை நூற்றாண்டில் மனித உரிமைகளைப் பற்றிய அறியாமை இருள் கற்றவர் மத்தியிலும் காணப்படுகிறது. ஆத்தோடு இல்லாமல் கல்விநிறுவனங்களில் சில சமயங்களில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நிகழ்கின்றன. ஆதனைக் கட்டுப்படுத்தும் மனித உரிமைச் சட்டங்களை அமலாக்கம் செய்வதில் பின்னடைவு ஏற்படுகிறது. அதற்கான தீர்வு என்ன? மனித உரிமைகள் எவை? ஆவற்றிற்கான அடிப்படைச் சுதந்திரங்களை நடைமுறையாக்க என்ன வழி? என்ற செய்திகளை அறிந்துகொள்ளுதலே முக்கியத்துவம் ஆகிறது. உலகளாவிய மனித உரிமை பிரகடனம் மனித உரிமைக்கல்வியை உலகம் முழுவதும் கொண்டு செல்க என அழைப்பு விடுத்து. பல ஆண்டுகள் ஆயின. மேலும், ஐக்கிய நாடுகளது இன்றியமையாமைப் பணிகளில் மனித உரிமைக்கல்வியும் ஒன்று. 1995 - 2004 இந்தப் பத்தாண்டு காலத்தில் ஐ.நா வின் மனித உரிமைக்கல்வியைப் பரவாலாக்கம் பெற்றது எனலாம்.

**மனித உரிமைக் கல்வியின் குறிக்கோள்கள்:**

பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மனித உரிமைகளைக் கற்றால் சகிப்புத்தன்மை இருசார்பு மரியாதை ஒற்றுமை பேணுதல் ஆகிய நல்லுணர்வை பெறுவீர்கள். மாணக்கருக்கும் அவ்வாறான நற்பண்பு நலன்களைப் பயிற்று விக்கமுடியும். மனித உரிமைகளைச் சமூக அரசியில் வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதே குறிக்கோளாகும்.

**மனித உரிமைக் கல்வியின் நோக்கம்:**

மனித உரிமைக் கல்வியின் நோக்கம் இக்காலக்கட்டத்தின் தேவையாகின்றன. மக்களாட்சி முறையில் பண்பாட்டை உருவாக்கவும், உலகில் பாதுகாப்பையும் அமைதியையும் நிலவச் செய்வதும், மனித உரிமை மீறல்கள் நிகழும்போது மீறல்கள் நிகழாமல் மனக்கட்டுப்பாட்டை உருவாக்கவும், சமூகங்கள் நாடுகள் இடையே நல்லுணர்வை ஏற்படுத்தவும், இயற்கைப் பேரிடர்காலங்களிலும் பெண்களைப் பாலியல் கொடுமைகள் செய்து இழிவுப்படுத்தும் சூழல்களிலும் மனித உரிமைகளைச் செயல்படுத்த, அவை தொடர்பான நடைமுறைச் சட்டத் திட்டங்களைப் பயிற்றுவிக்க மனித உரிமைக் கல்வி கற்பிப்பது நோக்கமாகின்றன.

**மனித உரிமைகளைக் கற்பிக்கும் முறைகள்:**

மனித உரிமைக்கல்வியைத் தமிழ்வழியில் கற்பிக்கும் முறைகள் பத்து வகைப்படுத்தலாம் அவை. 1) குறிக்கோள்கள் 2) சொற்பொழிவு ஆற்றுதல் 3) மாதிரிச் சொற்பொழிவு 4) கலந்துரையாடுதல் 5) தனிஆள் பற்றிய ஆய்வு 6) நிகழ்வு 7) நாடகப்பாத்திரம் ஏற்றல்ஃநடித்தல் 8) விளையாட்டு முறைகள் 9) கூட்டாகக் கற்றல் முறை 10) சமூகச் செயல்பாடுகள் என்பனவாகும்.

மனித உரிமைக்கல்வியை யாரால் திறம்பட பயிற்றமுடியும் என்றால் மனித உரிமைக்கல்வி பயின்ற ஆசிரியரால்தான் தரமுடியும். பிற பாடங்களைக் கற்றல்-கற்பித்தல் அணுகுமுறையிலிருந்து மனித உரிமைகளைக் கற்பிக்கும் முறைகளில் படைப்பாற்றலைப் பயன்படுத்தலாம். இந்தக்கல்வியை அன்றாட வாழ்வின் அனுபவங்களிலிருந்து ஆசிரியரும் மாணவரும் கலந்துரையாடும் முறையில் பகிர்ந்து கொள்ளலாம். அதுமட்டுமின்றி இருபால் மாணக்கரும் மகிழ்ச்சியடனும், ஈடுப்பாட்டுடனும், தங்கள்வாழ்வு, தங்கள் குடும்பவாழ்வு, தாங்கள் வாழும் சமூக வாழ்வு எதிர்காலத்தில் தலைமைத்துவ ஆளுமையில் பண்பும் அரசியல் மக்களாட்சி வாழ்வும் முதலியவை அனைத்திலும் உயர்வு பெறும் வாய்ப்பை பெறவேண்டும் என்பதற்காக மனித உரிமைப்பாடத்தை விரும்பி கற்கவேண்டும்.

**குறிக்கோள்கள் :**

1. *படைப்புத்திறனைப் பயன்படுத்தும் வழிமுறைகளைக் கற்றுக்கொள்ள முடியும்.*
2. *மாணக்கரை ஈடுபாடு கொள்ளச்செய்யும் அணுமுறைகளை அறிந்து கொள்ளமுடியும்.*
3. *பங்கேற்பு முறையில் எவ்வாறு பயிற்றுவிக்கலாம் எனத் தெரிந்து கொள்ளமுடியும்.*
4. *மகிழ்வூட்டும் முறைகளைப் பயன்படுத்தும் திறன் பெறமுடியும்.*
5. *வகைமைத் திறமைகளைக் கொண்ட மாணக்கரது உள்ளுறையும் திறன்களை (Soft Skills) வெளிப்படுத்தச் சுதந்திரம் கொடுக்கமுடியும்.*

**சொற்பொழிவு ஆற்றுதல்:**

- *நடத்தபோகும் பாடம் பற்றிய தலைப்பை முன்னரே அறிவித்து விட்டு அதுகுறித்த தகவல்களை அறிந்து வந்து பேச வைத்தல்.*
- *குறிப்பிட்ட மனித உரிமை சார்ந்த தலைப்பைக் கொடுத்து பேசவைத்தல்.*
- *ஒரு தலைப்பைக் கொடுத்த ஒட்டியும் வெட்டியம் பேச செய்தல்.*
- *வீட்டில் தயாரித்த சொற்பொழிவை நிழ்த்துமாறு செய்தல்.*

**மாதிரிச் சொற்பொழிவு:**

*வகுப்பறையில் உள்ள சூழல்களுக்கு ஏற்ப மனித உரிமைகல்வி ஆசிரியர், மாணவர்களை வரவேற்று வணக்கம் செலுத்தி மனித உரிமைகள் பற்றி பேச வந்துள்ளேன். யார் குழந்தைகள்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? என்ற விவரத்தினைப் பேச வேண்டும். மேலும், குழந்தைகளின் கல்வி, பெற்றோரின் கடமைகள் - இனிபிறக்கப்போகும் குழந்தைகள் ஆணா? பெண்ணா? என்று கண்டறிவது சட்டவிரோதம், பெண்குழந்தை என்றால் தாயின் வயிற்றிலேயே கதையை முடித்துவிட*

முடியாது. பெண்குழந்தைகளுக்கும் வாழ்வுரிமை உண்டு என்றும், பெற்றோர்கள் பிள்ளைகளை எப்பொழுதும் படி படி என்று துன்புறுத்துவது தவறு என்றும் பாரதியின் பாடல்வரிகளை எடுத்துக்காட்டியும் 'காலைஎழுந்தவுடன்படி' என்றும் மாலை முழுவதும் விளையாட்டு என்றும் குறிப்பிடல் மேலும், ஐக்கிய நாடுகளின் சபை குழந்தைகள் உரிமை 42 என்ற விதியில் செய்திகுறிப்பிட்டுள்ள செய்திகளை அறிதல் மதிக்க கற்று கொடுத்தல் ஆகும்.

**கலந்துரையாடல்:**

- ஆசிரியர் X மாணவர் - இருவர்போதும்
- ஆசிரியா X மாணவர் X பெற்றோர் - மூவர்போதும்
- ஆசிரியர் X மாணவர் X பெற்றோர் X மாணவர்களுடன் - நால்வர்போதும்
- மாணவர் X தன்குழுவுடன் கலந்து உரையாடுதல் ஐந்துபேர் முதல் ஒன்பது பேர் இருப்பது நன்று.

**குழு கலந்துரையாடல் மாதிரி:**

குழுத்தலைவரைத் தெரிவு செய்தல் - எதைப்பற்றி பேசுதல் - தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் (எ.டு) பன்மைச் சமூகம் - பன்மைச் சமூகம் என்றால் என்ன? ஒருவர் விடையளித்தல் மற்றொருவர் பதில் சொல்லுதல் அமைப்பில் கலந்துரையாடல் (நம் நாட்டில் பலமொழி, பலஇனம், பலவித பண்பாடு இவற்றோடு வாழும் முறை) மற்றொருவர்: பன்மைச் சமூகத்தின்படி என்ன உரிமைகள் நமக்கு உண்டு? ஒவ்வொருவரும் அவரவர் விரும்பிய மத்ததைச் சேரலாம், விரும்பிய மொழியைப் பேசலாம், தங்களின் இனப்பண்பாட்டைத் தனித்தனியே பாதுகாக்கலாம். என்ற அமைப்பில் குழு கலந்துரையாடல் இருத்தல்.

**தனி ஆள் பற்றிய ஆய்வு *(Case Study)***

shctpt.edu

- *தனி ஆள் பற்றிய ஆய்வு எப்படிப்பட்டதாக இருக்கலாம் என்றால்,*
- *தனிநபர் ஒருவர் வாழ்வில் பாதிக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த அனுபவபகிர்வாக இருக்கலாம்.*
- *வழியில் பள்ளிக்குச் சென்றபோது கேலிவதைப் பாதிப்பு அனுபவமாகலாம்.*
- *வகுப்பறையில் நிகழ்ந்த வன்முறையாக இருக்கலாம்.*
- *நெருக்கடி காரணமாகத் தண்டனையில் வகுப்பு மாணவர் கைகள் காயமான நிகழ்வாக இருக்கலாம்.*

***நிகழ்வு :***

*அது ஒரு பள்ளியாகவும் இருக்கலாம் கல்லூரியாகவும் இருக்கலாம் வகுப்பு ஆசிரியரின் கைப்பையில் இருந்த ரூபாய் அல்லது விலை உயர்ந்த பொருளாகவும் இருக்கலாம். இடைவேளை மணிநேரம் முடிந்து பார்க்கும்போது பொருள் காணவில்;லை ஆசிரியரின் தோற்றநிலை*

*'முகத்தில் மருட்சி மிரட்சி கோபம் ஆத்திரம்'*

*எவண்டா என்பையைத்திறந்து பொருளை எடுத்தவன்?*

*மாணவர்களின் முகங்களில் அதிர்ச்சி பயம் திகில் பதற்றம் ஆசிரியர் ஒருவரை அழைத்து 30 சூடம் வாங்கி - கையில் ஏற்றல் அலறல், கல்வி நிலையத்தின் தலைமைக்குச் செய்தி எட்டுதல் மனித உரிமை மீறல் - விசாரணைக் குற்றச்சாட்டு பதிவு செய்தல் - பத்திரிக்கை செய்தியாகுதல் முதன்மைக்கல்வி அதிகாரி நடவடிக்கை தொடர்தல் - தனிப்பட்ட ஆசிரியரின் ஒரு பிரச்சனையைத் தவறாகக் கையாண்ட காரணம் - பாதிப்பு பற்றி ஆய்வு செய்தல்.*

***நாடகப் பாத்திரம் ஏற்றல்:***

அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை ஏற்று தனிநடிப்புச் செய்தல். பீமராவ் - 13வது குழந்தை - பள்ளிப்பருவம் கசப்புகள் நிறைந்தது - கோணிப்பை மீது தனியாக உட்கார்ந்திருப்பேன் - உணவுப் பாத்திரம் தனியாக ஒரு மூலையில் வைப்பேன். - ஆதிக்கச்சாதி மாணவர்கள் பாத்திரத்தில் பட்டால் தீட்டாகிவிடுமாம் - எனது சமூகத்தில் ஒரு சதவீதம் கூட படிக்காமை - கல்லூரிக்குச்சென்றமை இல்லை - எனக்கு அன்புகாட்டி அரவணைத்த ஆசிரியர் பீமராவ் பெயரை நன்றி பெருக்கால் சூட்டிக்கொண்டமை - சமுதாயத்தின் கேடுகளுக்கல்லாம் மாமருந்து கல்வியே என்பதை இளமையில் கற்றுக்கொண்டமை - ஊருக்குத்திரும்பி வந்தபொழுது மாட்டுவண்டியில் செல்லுகையில் வண்டிக்காரன் நான் தாழ்த்தப்பட்டவன் என்பதால் கீழே தள்விடல் - எனது திருமணம் எங்கே நடந்தது கருவாட்டு சந்தையில் இரவில் - பாரோடா மன்னன் படிக்க உதவி - இலண்டன் பல்கலைக்கழகம் - அமெரிக்காவிலுள்ள கொலம்பிய பல்கலைக்கழகம் இவையிரண்டிலும் உயர்கல்வி கற்றல் - பட்டம்பெறல் போன்ற அமைப்பில் நாடகம் நடித்தல்.

**விளையாட்டு முறைகள்:**

விளையட்டு முறைகளில் எவ்வாறு மனித உரிமைக் கல்வியைக் கற்பிக்கலாம் என்றால், 'மணப்பெண் சந்தை' என்ற தலைப்பில் இரண்டு அணிகள் ஐந்து ஐந்து பேர் எதிர் எதிர் அணியாகச் நின்று மணப்பெண்ணை ஏலாம் விடும் முறையில் ஓர் அணியினர் முதலில் சடுகுடு சடுகுடு ஒரு இலட்சம் - மற்ற அணியினர் சடுகுடு சடுகுடு ஐம்பதாயிரம் - மற்ற அணியினர் சடுகுடு 100பவுன் போட்ட போதும் - அப்பொழுது இரண்டு காவலர்கள் வருகை - உங்களைக் கைது செய்கிறோம் வரதட்சணைக்குப் பெண்களை விற்றதாக வழக்குப் பதிவு செய்தல் - அதில் ஒருவர் காவலருக்கு 2000 ரூபாய் கையூட்டுக் கொடுத்தல் (லஞ்சம்) கையூட்டா - கைது செய்து அழைத்த செல்லல் - (உள்ளிருந்து ஒரு குரல்) வரதட்சணைக் கேப்பதும் கொடுப்பதும், வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின்படி குற்றம். ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும் மேலும், 15,000 அல்லது வரதட்சணைக் கேட்ட தொகையில் எது அதிகமோ அதில் தண்டத்தொகை (அபராதம்) என்று செல்லுதல்.



shctpt.edu

***முறையிடுதல்கள்:***

*முறையிடுதல் முறை என்பது எங்கே மனித உரிமை மீறல்கள் நடக்கின்றதோ, அந்த மனித உரிமை மீறலைத் தெரிவிக்க மடல்விடுப்பது (கடிதம்) சிறந்த அணுகுமுறைகளில் ஒன்று. நம் தெருவில் குப்பைக் குவியல் அள்ளாப்படாமல் கிடப்பது பற்றியும், மின்விளக்குத் தண்ணீர்குழாய் சரிசெய்தல் போன்ற வேலைகளைச் சரியாகச் செய்யவேண்டியும் அந்தந்த துறைச்சார்ந்தவர்களுக்கு மடல் எழுதுதல்.*

***கூட்டாகக் கற்றல் முறை:***

- *மனித உரிமைகளை உணர்ந்து ஆவணப்படங்களைக்காட்டி முடிவில் மாணவர்கள் என்னென்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை கலந்துரையாடல் செய்தல்.*
- *மாணவர்களைப் பல குழுக்காளாகப் பிரித்து ஏதாவது மனித உரிமைகள் சட்டம் பற்றி ஒவ்வொருவர் கருத்தையும் வாக்கியத்தையும் அட்டையில் எழுதச்செய்தல்.*
- *பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அற்கான காரணங்கள் அதனொடு தொடர்புடைய மனித உரிமை விழிப்புணர்வுகள் பற்றி பேசவைக்கலாம்.*
- *மாணக்கர் இடையே மனித உரிமைப் பற்றி விவாதம் நடத்தி மாணவர்களின் கருத்தைக் கேட்பது.*
- *முனித உரிமை மீறல்கள் பற்றி வாரப்பத்திரிக்கைகளில் காணலாகும் செய்திகளைச் சேகரித்து வகுப்பில் வாசிக்க செய்வது.*
- *மனித உரிமையை வெளிப்படுத்தும் ஓவியங்கள், கவிதைகள் புனைவது.*
- *மனித உரிமை நாள்விழா கொண்டாடி மகிழ்தல் நிகழ்ச்சி நடத்துதல்.*

***சமூகச் செயல்பாடுகள்:***

Shcript.edu

மனித உரிமைகள் பற்றிய முழக்க அட்டைகளைத் தயாரித்து ஊர்வலம் செல்லுதல், மனித உரிமை வாசகங்ள் அடங்கிய அட்டைகளையே துணியிலோ கொடிகளையோ மக்களின் பார்வைப்படும் இடைங்களில் வைப்பது. அத்தோடு மட்டுமில்லாமல் கல்வி நிறுவனங்களில் மனிதஉரிமைகளின் விழாக்களில் தலைவர்கள், ஊர்மக்கள் மற்றும் பெற்றோர்கள் போன்றவர்களை இணைத்து சமூகச் செயல்பாட்டுடன் செயல்படலாம். இன்றைய சூழலில் வகுப்பறையில் பாடம் கற்கும் மாணவ பருவத்தினர் சிலர், மந்தத்தனமான பங்கேற்பு இல்லாத வெறும்பாடம் கேட்கும் மனநிலை உடையவர்களாக இருக்கின்றனர். ஆகையினர், கேட்டல், கற்றல் முறையை மாற்றி, மாற்று அணுகுமுறை மூலம் பாடத்தை மாணவர்கள் ஈடுப்பாட்டுடன் கற்பதற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்தல் அவசியமாகின்றன. மேலும், இந்த மாணவ பருவத்தினர் மனித உரிமைக் கல்வியைக் கற்று எங்கெல்லாம் மனிதஉரிமை மீறல்கள், பெண்வன்கொடுமைகள், மனித மாண்புகள் மதிக்கப்படவில்லையோ அதனை நீக்கும் சக்திகளாக விளங்கவேண்டும்.

**துணைநின்ற நூல்கள்:**


1. தேவசகாயம் இ. இருவர் மனிதஉரிமைகள் ஓர் அறிமுகம் *(2002),* மனித உரிமைக்கல்வி நிறுவனம், மதுரை - 2.
2. கிரிஸ் ரூ மூவர் பெண்ணுரிமைகள் *(2002),* மனித உரிமைக்கல்வி நிறுவனம், மது;ரை - 2.
3. தேவசகாயம் இ மனித உரிமைக்கல்வி மாணவர் கையேடு-2002, அலோசியசு இருதயம் முதற்பாகம், மனித உரிகை கல்வி நிறுவனம், மதுரை - 2.
4. தேவசகாயம் இ குழந்தை உரிமைகள் *(2003),* மனித உரிமைக்கல்வி நிறுவனம், மதுரை - 2.
5. இராஜ முத்திருளாண்டி மனித உரிமைகள் *(2012),* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 98.

*6.* தேவ்நாத் சி.எஸ் அடிப்படை மனித உரிமைகள் *(2001),*
நர்மதா பதிப்பகம் சென்

shctpt.edu